# (சார்பு நீதிமன்றம்) செஞ்சி

ஓ.எஸ்.எண். 106/2022 நாள்.26.09.2023

2023ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 26ம் நாள் வாதி தரப்பு 2 ம் சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வெங்கடேசன் | தொழில் | |
| த. பெ./க.பெ. | குப்பன் | சாதி | |
| கிராமம் | ஆலம்பூண்டி | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 47 |

**வ.சா.2**

**குறுக்கு விசாரணை**

வாதி பாண்டு சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். எனக்கு ஆங்கிலத்தில் எழுதவும், படிக்கவும் தெரியாது. தமிழ் படிக்க , எழுத தெரியும். வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையை நான் படித்து பார்த்தேன். பிராது ஆங்கிலத்தில் உள்ளதால் அதை நான் படித்து பார்தேன் என்று சொல்லுவது உண்மையில்லை என்றால் சரியல்ல. நான் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை வரவில்லை. எ னக்கு ஆலம்பூண்டி கிராமத்தில் நன்செய், புஞ்செய் நிலங்கள் உள்ளது. பிரதிவாதி 2015ம் ஆண்டு எங்கள் ஊரில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தார் என்றால் சரிதான். பிரதிவாதி எங்கள் ஊரில் பணிபுரிந்த போது நான் பட்டா மாற்றம் செய்ய மனு கொடுத்தேன் என்றாலும் உரிய ஆவணங்கள் இல்லாததால் பட்டா மாற்றம் செய்ய இயலாது என்று பிரதிவாதி சொன்னதால் விரோதம் கொண்டு அவருக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி வட்டிக்கு பணம்கொடுக்கும் தொழில் செய்கிறார் என்றால் சரியல்ல. 2015ம் ஆண்டு வாதியிடம் பிரதிவாதி ரூ 50 ஆயிரம் கடன் கேட்டார் என்றால் சரியல்ல. அதனால் வாதி 30,000, 10,000/-,10,000/- என்று மூன்று தவனைகளாக மொத்தம் ரூ. 50 ஆயிரம் பிரதிவாதிக்கு கொடுத்தார் என்றால் சரியல்ல. 2015 யிலிருந்து 2017 வரை பிரதிவாதி வட்டி தராததால் வாதி ரூ. 10 பைசா வீதம் பிரதிவாதியிடம் வட்டி கேட்டார் என்றால் சரியல்ல. அதற்கு பிரதிவாதி ரூ. 6 பைசா வட்டி கொடுப்பதாக சொன்னதற்கு வாதி சம்மதம் தெரிவித்தார் என்றால் சரியல்ல. பிரதிவாதி 24 தவணைகளாக அசல், வட்டி ரூ. 1,20,000/- வாதிக்கு கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

II வாதி அறிவிப்பு கொடுத்தது பற்றி எனக்கு தெரியாது. தாவா பாண்டை பிரதிவாதி நாராயணசாமி வாங்கி வந்தார். தாவா பாண்டு வாதி வீட்டில் வைத்து காலை 10 மணிக்கு எழுதப்பட்டது. தாவா பாண்டில் ஒரு ஸ்டேம்ப் ஒட்டப்பட்டிருந்தது. தாவா பாண்டில் பிரதிவாதி ஸ்டேம்ப் மீது ஒரு கையெழுத்தும் அதற்கு கீழே ஒரு கையெழுத்தும் போட்டார் . முதல் சாட்சி கையெழுத்து நான் போட்டேன். 2 வது சாட்சி கையெழுத்து பாண்டை எழுதிய ஏழுமலை என்பவர் போட்டார் . தணிகாசலம் என்பவர் எங்கள் ஊரை சேர்ந்தவர் இல்லை. அவரை பற்றி எனக்கு தெரியாது. மேற்படி தணிகாசலம் என்பவரின் அலுவலகத்தில் வைத்து பிரதிவாதி வெற்று பாண்டில் கையெழுத்து போட்டு கொடுத்தார் என்றால் சரியல்ல. 18.11.2020 தேதி பிரதிவாதி பணம் வாங்கும் போது பாண்டு எழுதிய இடத்தில் இருந்தார். நானும், வாதியும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள். வாதி எனக்கு உறவினர் இல்லை. வாதியும் நானும் ஒரே ஊர் என்பதால் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.